விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 040 வள்ளுவர் ஆண்டு 2057 தை 14 புதன்கிழமை (28.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




முல்லைத்தீவு மாங்குளத்தில்

## குளவிக்கொட்டுத் தாக்குதலில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மரணம்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு - மாங்குளத்தில் இடம்பெற்ற குளவிக்கொட்டுத் தாக்குதலில் துணுக்காய் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மரணமடைந்துள்ளார்.

இதில் 16ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணத்தில் காற்று மாசு

## கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகுதியில் நிலவும் காற்று மாசடைவைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண மாநகர சபைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் காற்று மாசடைவதைக் குறைப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிக்குமாறு கோரி, அந்தப் பகுதியில் வசிக்கும் வைத்தியர் உமாசுகி நடராஜா தாக்கல் செய்த எழுத்தாணை மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போதே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது. மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் 15ஆம் பக்கம் பார்க்க

# இந்தியாவில் பரவும் நிபா வைரஸ் தொற்று

## முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் இலங்கை

(கொழும்பு)

இந்தியாவில் நிபா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில் இலங்கையில் சுகாதார அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக சாராயம் விற்பனை

அராலியில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சாராய விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ரயிலுடன் மோதிய மோ.சைக்கிள்

மயிரிழையில் தப்பிய பெண்



(வவுனியா)

வவுனியா, தாண்டிக்குளத்தில் இடம்பெற்ற புகையிரத விபத் 15ஆம் பக்கம் பார்க்க

## கனேடிய உயர்ஸ்தானிகருடன் ஐ.த.தேசிய கூட்டணி சந்திப்பு



15ஆம் பக்கம் பார்க்க

## செட்டிகுளத்தில் வீதி விபத்து

நால்வர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கிப் பயணித்த கூலர் 15ஆம் பக்கம் பார்க்க

மன்னார் திருக்கேதீஸ்வர

## மகா சிவராத்திரி தொடர்பான கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வர திருத்தலத்தின் மகா சிவராத்திரி பெருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும் முதலாவது கலந்தாய்வுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை (27) காலை 09.30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலக 15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மராட்சி சிவபூமி பாடசாலை

(வேலாயுதம் வீதி, சாவகச்சேரி)

## திறப்பு விழா

**காலம்**

28.01.2026 புதன்கிழமை காலை 9.30 மணி

**இடம்**

"தங்கவாசம்", வேலாயுதம் வீதி, சாவகச்சேரி

**தலைவர்**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

(தலைவர்- சிவபூமி அறக்கட்டளை இலங்கை)

### நிகழ்ச்சி நிரல்

**மங்கல விளக்கேற்றல்**

**பாடசாலையைத் திறந்து வைத்தல்**

**இறைவழிபாடு**

வரவேற்புரை

**திரு.சி.குணசீலன்** (இளைப்பாறிய விரிவுரையாளர்)

(நிர்வாக சபை உறுப்பினர் - சிவபூமி அறக்கட்டளை)

ஆசியுரை

**கலாநிதி சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்**

(ஆலய பிரதம குரு -சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்)

**தலைமையுரை**

பிரதம விருந்தினர்

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்**

(முன்னாள் துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்

திரு. F.C.சத்தியசோதி (பிரதேச செயலாளர் - சாவகச்சேரி)

கௌரவ விருந்தினர்

**வைத்தியகலாநிதி. கமலா அருணாசலம்**

(தலைவர் - கேன் புற்றுநோய்காப்பகம், இங்கிலாந்து)

திரு.வ.சிறிபிரகாஸ்

(தவிசாளர்- நகரசபை, சாவகச்சேரி)

**சிவபூமிப் பாடசாலை**

**மாணவர்களின் கலைநிகழ்வு**

நன்றியுரை

மதிய விருந்து

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

நிர்வாக சபை -சிவபூமி அறக்கட்டளை

(C-4897)

Head Office - Sivapoomi Trust, Kondavil East, Kondavil, Jaffna, Sri Lanka.
T.P- 021-222-7938 WWW.Sivapoomi.Com Sivapoomi@Gmail.com


# விசாரணைக்கு முன்னிலையாக மறுத்த ஷிரந்தி ராஜபக்ஷ

வங்கிக் கணக்கு ஒன்று தொடர்பான விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவில் நேற்று முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவினரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தனிப்பட்ட விடயம் காரணமாக பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவில் நேற்று செவ்வாய்க்கிழமை (27) முன்னிலையாக முடியாது என மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ உத்தியோகபூர்வ கடிதம் மூலம் பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவுக்கு அறிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் "சிறிலிய" என்ற பெயரில் பயன்படுத்தி வங்கி கணக்கு தொடர்பில் பொலிஸ் நிதி குற்றவியல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஷிரந்தி ராஜபக்ஷ அழைக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அம்பலாங்கொடையில் துப்பாக்கிச் சூடு; இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுனாமிவத்தை பகுதியில் உள்ள வீடொன்றில் நடைபெற்ற களியாட்ட நிகழ்வின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 28 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு நடந்த விருந்துபசாரத்தின் போது, அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், படுகாயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பவத்திற்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், பிஸ்டல் வகை துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன. (ம-7)


## பெயர் மாற்ற அறிவித்தல்

உடுவில் தெற்கு புதுமடம் மானிப்பாயில் வசிக்கும் யுவராசன் சென்சியா எனும் பெயரை இன்று முதல் ஷாஷா என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

உண்மையுள்ள
யுவராசன் ஷாஷா

(6676)

## பெயர் மாற்ற அறிவித்தல்

உடுவில் தெற்கு புதுமடம் மானிப்பாயில் வசிக்கும் யுவராசன் அலிலாநூறி எனும் பெயரை இன்று முதல் அஹானா என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகிறேன்.

உண்மையுள்ள
யுவராசன் அஹானா

(6675)


## மணமக்கள் தேவை

சூ.செவ்வாய் (1997)
அவுஸ்திரேலியா
மணமகளுக்கு மற்றும்
உங்களுக்கேற்ற மணமக்கள்
பார்த்து தரப்படும்.

077 889 4353
076 475 2219

(1992)


# மரண அறிவித்தல்



மலர்வு 19.08.1956 உதிர்வு 27.01.2026

## நாகநாதபிள்ளை சபாநாதன்

வேலணை மேற்கு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 10B, காயத்திரி வீதி, கூமாங்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதபிள்ளை(துரைச்சாமி) சபாநாதன் அவர்கள் நேற்று (27.01.2026) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதபிள்ளை - விஜயலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - தவமணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் பத்மினி அவர்களின் பாசமிகு கணவரும் அதீஷன்(நியூசிலாந்து - பொறியியலாளர்), கவிந்தன்(Spakt உணவகம் - தோணிக்கல்), தட்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் துர்க்காயினி (நியூசிலாந்து, முன்னாள் மத்திய வங்கி ஊழியர்), ஜனனி, பவன்(ஊழியர் - வலம்புரி பத்திரிகை) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகௌரி, பக்தகௌரி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற பவநாதன், கேதாரகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநாதன் (கனடா), ரஞ்சினி, ஜெயராசா, பரமேஸ்வரி, சோதிமலர், காலஞ்சென்ற மனோகரன், குமுதினி, குணாளன், குமரவேள் (நடன ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் சர்விகன்(நியூசிலாந்து), அஷ்ரிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2026) புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10B, காயத்திரி லேன்,
கூமாங்குளம்
வவுனியா.

(C-4898)

*தகவல்:*
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் கடத்தல் இரு சந்தேக நபர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனம் ஒன்றினை பொலிஸார் மடக்கிப் பிடித்ததுடன் டிப்பர் சாரதி மற்றும் உதவியாளரை கைது செய்துள்ளனர்.

மருதனார்மடம் பகுதியில் நேற்றைய தினம் வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுன்னாகம் பொலிஸார், வீதியில் பயணித்த இரு டிப்பர் வாகனங்களை வழிமறித்த நிலையில், பொலிஸாரின் கட்டளையை மீறி வாகனத்தை சாரதிகள் செலுத்த முற்பட்ட வேளை ஒரு டிப்பர் வாகனத்தை பொலிஸார் மடக்கி பிடித்த நிலையில் மற்றைய வாகனம் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளது.

குறித்த வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளரை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட வேளை, உரிய அனுமதிகள் இன்றி கிளாலி பகுதியில் இருந்து மணலை ஏற்றி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-33-104)

# ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகள்



மட்டக்களப்பு கிரான்குளத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் ஒரே பிரசவத்தில் 5 ஆண் குழந்தைகளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரோக்கியமாகப் பெற்றெடுத்துள்ளார்.

கிரான்குளத்தை சேர்ந்த சிவா மனோஜினி தம்பதியினருக்கே இந்த அரிய கொடை கிடைத்துள்ளது.

குழந்தைகளும் தாயும் நலமுடன் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (8)

# வீதிகளில் தொடரும் விபத்துக்கள் 25 நாட்களில் 155 பேர் பலி

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 1,375 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவற்றில் 147 பாரதூரமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன், அந்த விபத்துக்களில் 155 பேர் உயிரிழந்துள்ளதாக போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார். (8)

# கதிரியக்க தொழில் நுட்பவியலாளர்கள் நாடளாவிய ரீதியில் இன்று வேலை நிறுத்தம்

## வைத்தியசாலைகள் முடங்குமெனவும் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாடு முழுவதும் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் இன்று காலை 8 மணிமுதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

தொழிற்சங்க நடவடிக்கையின் போது, சி.டி ஸ்கேன், எம்.ஆர்.ஐ ஸ்கேன், மேமோகிராம் மற்றும் அறுவை சிகிச்சை அறைகளில் கதிர்வீச்சு பயன்பாடு தேவைப்படும் அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட அனைத்து கதிரியக்க பரிசோதனைகளும் பாதிக்கப்படும் என சங்கத்தின் தலைவர் சானக தர்ம விக்ரம எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனவரி 21 ஆம் திகதி தொடங்கப்பட்ட ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்திற்குப் பின்னர் திருப்திகரமான தீர்வு எதுவும் கிடைக்காவிட்டால், தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தைத் தொடர முடிவு செய்யப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (க-8)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு கனேடிய உயர்ஸ்தானிகர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டீன் அம்மையார் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.




கடந்த இரு நாட்களாக வடக்குக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள கனேடிய உயர்ஸ்தானிகர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்து, பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் பல்கலைக் கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர், நூலகர் மற்றும் அரசறிவியல், பொருளியல் மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைகளின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புகளின் போது, அரசியல், பொருளாதார நிலைமைகள் உட்பட சமகால விடயங்கள் பற்றியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கனேடியத் தூதரக அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. (8-33)

# போதையில் சாரத்தியம் கண்டறிய ஆய்வகங்கள்

(கொழும்பு)

முச்சக்கர வண்டிகள் மற்றும் கனரக வாகனங்களை போதைப்பொருள் பாவித்த நிலையில் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிவதற்காக, நடமாடும் ஆய்வக வசதிகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அந்த நிறுவகத்தின் தலைவர் பேராசிரியர் யு. சி. பி. பெரேரா, இந்த விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் மாதங்களில் நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டார்.

முன்னோடித் திட்டமாக, கொழும்பு பெஸ்டியன் மாவத்தையில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 57 பயணிகள் பேருந்து சாரதிகள் இந்த நடமாடும் ஆய்வகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களில் 10 சாரதிகள் பல்வேறு வகையான போதைப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இத்தகைய திடீர் சோதனைகள் இனிவரும் காலங்களில் தீவிரப்படுத்தப்படவுள்ளன. (க-8)

# ஜனவரி மாத அஸ்வெசும கொடுப்பனவு

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் தகுதி பெற்றுள்ள பயனாளிகளுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகளும், இரு கட்டங்களுக்குமான ஜனவரி மாத முதியோர் கொடுப்பனவுகளும் இன்று புதன்கிழமை அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. (8)

# இளம் வயதினரிடையே குற்றச் செயல்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 10 ஆண்டுகளில் 16 முதல் 22 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களின் குற்றவியல் நடத்தைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக தடயவியல் மனநல விசேட மருத்துவ நிபுணர் தாரக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், நீதிமன்ற விசாரணைகளின் மூலம் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதே நிலை நீடித்தால், எதிர்காலத்தில் நாட்டின் சிறைச்சாலைகள் 16 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களாலேயே நிரம்பி வழியும் என அவர் எச்சரித்தார்.

மனநலப் பாதிப்பு உள்ளவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்ற சமூகக் கருத்து முற்றிலும் தவறானது என அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்களிடம் ஆக்கபூர்வமான திறமைகள் உள்ளன.

முறையான அறிவியல் சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வு மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டுச் செய்திகள்

## மூன்றாவது ரி-20 போட்டி



## அபிஷேக் சர்மாவின் அதிரடி ஆட்டத்தால்
# தொடரை கைப்பற்றிய இந்தியா!

**அபிஷேக் சர்மா மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோரின் அபாரமான அரை சதங்களால் நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ரி-20 போட்டியில் இந்தியா 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.**

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒருநாள் 5 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. இதை யடுத்து நடைபெற்ற முதல் 2 ரி-20 போட்டிகளில் இந்தியா வென்று 2-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தியா-நியூசிலாந்து இடையிலான 3 ஆவது ரி-20 போட்டி ஞாயிற்றுக் கிழமை கவுகாத்தியில் நடைபெற்று வரு கிறது. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்தியா பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன் படி முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 153 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக பிலிப்ஸ் 48 ஓட்டங்கள் அடித்தார். இந்திய அணி தரப்பில் பும்ரா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 154 ஓட்டங்கள் என்ற வெற்றி இல க்குடன் கள மிறங்கிய இந்திய அணி அதிரடியாக விளையாடி ஓட்டங்களை குவித்தது. சரவெடியாய் வெடித்த அபி ஷேக் சர்மா 14 பந்துகளில் அரை சதம் கடந்து 68 ஓட்டங்களைப் பெற்று அசத்தினார். யுவராஜ் சிங் கிற்கு அடுத்தபடியாக அதிவேகமாக அரைசதம் அடித்த இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்தார். மறு முனையில் அதிரடியாக விளையாடிய சூரிய குமார் யாதவ் அரை சதம் அடித்தார். இறுதியில் 10 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 155 ஓட்டங்கள் எடுத்து இந்தியா எளிதில் வெற்றி பெற்று ரி- 20 தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. (3)

## ரி- 20 உலகக் கிண்ண தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிப்பு



பாதுகாப்பு காரணங்களுக்காக இந்தியா செல்ல மறுத்த பங்களாதேஷ்க்கு பதிலாக ஸ்கொட்லாந்து அணியை சர்வதேச கிரிக்கெட் பேரவை இணைத்த நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவர் மொஹ்சின் நக்வி தொடரை புறக்கணிக்கப் போவதாக மறைமுகமாக எச்சரித்திருந்தார்.

இதனால் பாகிஸ்தான் பங்கேற்பதில் இழுபறி நீடித்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிரடியாக தொடருக்கான குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும் பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் மார்ச் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில், பாகிஸ்தான் அணியை சல்மான் அலி ஆகா வழிநடத்தவுள்ளார்.

அந்த வகையில் பாகிஸ்தான் உலகக் கிண்ண குழாத்தில் சல்மான் அலி ஆகா (தலைவர்), அப்ரார் அஹமட், பாபர் அசாம், பஹீம் அஷ்ரப், ஃபகார் சமான், கவாஜா மொஹமட் நஃபய் (விக்கெட் காப்பாளர்), மொஹமட் நவாஸ், மொஹமட் சல்மான் மிர்சா, நசீம் ஷா, சாஹிப்ஸாதா ஃபர்ஹான் (விக்கெட் காப்பாளர்), சைம் அயூப், ஷாஹீன் ஷா அப்ரிடி, ஷதாப் கான், உஸ்மான் கான் (விக்கெட் காப்பாளர்) மற்றும் உஸ்மான் தாரிக் ஆகிய வீரர்கள் இடம்பெறவுள்ளனர். (3)

## மூன்றாவது முறையாக சம்பியன்; சாதனை படைத்த சன்ரைசர்ஸ்!



முன்னனி லீக் கிரிக்கெட் போட்டிகளில் ஒன்றான எஸ்.ஏ ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் பிரிட்டோரியா கெப்பிட்டல்ஸ் அணியை வீழ்த்தி சன்ரைசஸ் ஈஸ்டர்ன் கேப் அணி 3 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தியது.

எஸ்.ஏ ரி-20 லீக் தொடர் தென் ஆபிரிக்காவில் நடைபெற்றது. இதில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரிட்டோரியா கேப்பிட்டல்ஸ், சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் அணிகள் பலப்பரீட்சை நடாத்தின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சன்ரைசர்ஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய பிரிட்டோரியா கேப்பிடல்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இந்நிலையில் 159 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சன்ரைசர்ஸ் ஈஸ்ட்ரன் கேப் அணி 19.2 ஓவரில் 4 விக் கெட்டினை மாத்திரம் இழந்து 162 ஓட்டங்களை பெற்று 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அசத்தியது. இதன் மூலம் சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சிவபூமி பாடசாலையின் திறப்பு விழா நிகழ்வானது இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி, "தங்க வாசம்", வேலாயுதம் வீதி எனும் முகவரியில் இடம்பெற வுள்ளது.

இலங்கை சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையினை சிவபூமி அறக்கட்டளை இளைப்பாறிய விரிவுரை யாளர் சி.குணசீலன், ஆசியுரையினை சாவகச்சேரி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு ஜெகதீஸ்வரக் குருக்களும் நிகழ்த்தவுள்ளனர். (8)






# மரண அறிவித்தல்



தோற்றம்
1943 - 12 - 26

மறைவு
2026 - 01 - 25

## தியாகராஜா திலகவதி

அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா திலகவதி அவர்கள் கடந்த 25.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி (வின்சன் தியேட்டர்-முகாமையாளர்), தங்கம்மா தம்பதியரின் இளைய மகளும், காலம் சென்ற சுப்பிரமணியம்- சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலம் சென்ற தியாகராஜா (சியாமளா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலம் சென்ற பத்மாவதி, பாலச்சந்திரன், நித்தியானந்தன், மனோகரன் மற்றும் சரஸ்வதி, லீலாவதி, கலாவதி, சிவநாதன், சுகுணாவதி, சற்குணாநந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இந்துமதி(லண்டன்),பானுமதி(கொலண்ட்),உமைச் செல்வன் (லண்டன்), உமாபாலன்(லண்டன்), சியாமளா(லண்டன்), காலம் சென்ற ஜனார்த்தனன் மற்றும் ரகுராம்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலசுப்பிரமணியம்(லண்டன்), லோகராஜா (கொலண்ட்), முத்துமணி (லண்டன்), அஜந்தா(லண்டன்), செல்வபாஸ்கரன் (லண்டன்), அமலா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கர்-ஜெஷி, ஜீவகன் -ஜெனி, அஞ்சலி- பிரசன்னா, அனுசன், ஆருசன், மேனகா-ஜஸ்ரின், லாவணி-ஹை, றோஷினி, கபூர், ஷேயோன், திவாகர், ஆதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹண்டர், ஐஷாக், ஒலிவ், மாயோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் சங்கீதா அவர்களின் பாசமிகு வளர்ப்புத் தாயாரும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.01.2026 நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(6663)

175/8,
கைலாச பிள்ளையார் கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

தகவல்-குடும்பத்தினர்
மகன்-பாலன்
074 105 5976,
021 222 6847.

# இராசிபலன்

28.01.2026
தை 14, புதன்கிழமை
தசமி பிற்பகல் 2.48 மணிவரை
கார்த்திகை முற்பகல் 7.51 மணிவரை

ரோகிணி பின்னிரவு-6.12 மணிவரை
சுபநேரம் 5.06-6.36 மணிவரை
இராகுகாலம் 12.36-2.06 மணிவரை
அமிர்தசித்தம்,சுப முகூர்த்த நாள்

சந்திராஷ்டமம்-
சுவாதி

வளவன்

**மேஷம்**: தொலைபேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்**: ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்**: சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், திருடர் பயமுண்டு, ரோக நிலையுண்டு.

**மகரம்**: பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**: உடல் நலன் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை,உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்**: குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**: தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்**: நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**மிதுனம்**: தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**கன்னி**: பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு**: புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மீனம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

ஒருவர் செய்யும் பாவமே அவரைக் களங்கப்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசி பாவனையால் மனநல பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்கள்

## விசேட வைத்திய நிபுணர் சேனானி விஜேதுங்க

(கொழும்பு)

**கைத்தொலைபேசிகளுக்கு அடிமையாகியுள்ள பதின்ம வயது சிறுவர்கள் பல்வேறு மனநல பாதிப்புகளுக்கு உள்ளாகி இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

தேசிய மனநல நிறுவனத்தின் சிறுவர் மற்றும் இளம் பருவ மனநல விசேட வைத்திய நிபுணர் சேனானி விஜேதுங்க குறித்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொவிட் காலத்தில் சமூக ரீதியாக ஒன்றுகூட முடியாமல் போனதால் பாடசாலைக் கல்வி இணையவழியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக சிறுவர்கள் தங்களை அறியாமல் கைத்தொலைபேசிகளை அதிகளவு பயன்படுத்துவதற்குப் பழகிக்கொண்டனர்.

தற்போது இது ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இதுதவிர போதைப் பொருட்களுக்கு அடிமையானதன் காரணமாக மனநல பாதிப்புகளுக்கு உள்ளான பதின்ம வயது சிறுவர்களும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார். 13 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் இவ்வாறான சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுவதாகவும், இது சமூகத்தில் பாரிய பிரச்சினையாக மாறிவருவதாகவும் அவர் தெரிவித்தார். (8)

## தைப்பூசம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய தைப்பூச திருநாளில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.36 மணிமுதல் 10.30 மணி வரை ஏடுதொடக்கல் நிகழ்வும், பி.ப 5 மணிக்கு ஸ்ரீ முருகப்பெருமானுக்கு உருத்திராபிஷேகமும், அதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும், உள்வீதி உற்சவமும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மபரிபாலனசபை அறிவித்துள்ளது. (8)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சொக்கவளவு சோதி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா அஷ்டபந்தன உத்தம நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 06.02.2026 வெள்ளிக்கிழமை காலை 7.20 மணி முதல் 8.35 மணிவரையுள்ள சுபநேரத்தில் இடம்பெறவுள்ளது.

கர்மாரம்பம் 03.02.2026 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிக்கும், எண்ணெய் காப்பு 05.02.2026 வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரையும் இடம்பெறவுள்ளது. (8)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி சபையின் வருடாந்தப் பொதுக் கூட்ட நிகழ்வானது எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பூநகரி வைத்தியசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதேச வைத்திய அதிகாரி வி.தனேஷ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பூநகரி உதவி சுகாதார வைத்திய அதிகாரி ஸ்ரீ ஆனந்தசிறி, சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி என். சந்தோஷ் மற்றும் பூநகரி பிரதேச வைத்தியசாலை வைத்தியர் செல்வி.அமந்தா பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (3)

## சடலங்களை அடையாளம் காணுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் 09.02.2025 ஆம் திகதியில் விடுதி இலக்கம் 10இல் அனுமதிக்கப்பட்டு 15.02.2025 ஆம் திகதியில் இறந்து போன வயது 70 மதிக்கத்தக்க பெயர் தெரியாத ஒரு ஆணின் சடலமானது உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது.


எனவே குறித்த சடலத்தினை அடையாளம் காட்ட உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (8)

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பகுதியில் குளிரூட்டியில் 16.12.2025 ஆம் திகதியில் இருந்து பெயர், ஊர், வயது தெரியாத ஒரு ஆணின் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

எனவே, குறித்த சடலத்தினை அடையாளம் காட்ட உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (8)

## இராணுவ வாகனம் - கார் விபத்து



(யாழ்ப்பாணம்)

இராணுவ வாகனமும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச் சம்பவம் யாழ் நகர்ப்பகுதியை அண்மித்த மடத்தடி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் பாரிய காயங்கள் எற்படவில்லை.

விபத்து தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

## கைத்தொலைபேசி திருட்டு; இளைஞனுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து கையடக்கத் தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டில் கைதான இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வேளை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் கண்காணிப்பையும் மீறி, அத்துமீறி நுழைந்த இளைஞன் ஒருவர், சுத்திகரிப்பு பணியாளர்களின் மேற்பார்வையாளரின் கையடக்கத் தொலைபேசியைக் களவாடியுள்ளார்.

அது தொடர்பில் தகவல் அறிந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் விரைந்து செயற்பட்டு, கையடக்கத் தொலைபேசியைத் திருடிய இளைஞனை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (8-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 300 | 300 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 150 | 160 | 160 | 330 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 600 | 500 | 450 |
| தக்காளி | 550 | 600 | 600 | 600 | 550 | 460 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 200 | 150 | 200 | 100 |
| கோவா | 250 | 300 | 300 | 300 | 220 | 200 |
| கரட் | 300 | 450 | 400 | 450 | 450 | 350 |
| பூசணி | 100 | 120 | 120 | 140 | 100 | 80 |
| புடோல் | 200 | 250 | 300 | 300 | 250 | 200 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 240 | 100 | 190 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 400 | 150 | 340 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 | 200 | 180 | -- |
| பாகற்காய் | 500 | 600 | 700 | 600 | 500 | 450 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 400 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 500 | 500 | 800 | 500 | 500 | 300 |
| லீக்ஸ் | 400 | 450 | 300 | 450 | 450 | 380 |
| பீற்றூட் | 450 | 450 | 600 | 500 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 600 | 900 | 600 | 850 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 400 | 500 | 600 | 400 | 400 | 460 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 300 | 280 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 40-120 | 150 | 120 | -- | 130 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 200 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 100-150 | -- | 110 |
| இராசவள்ளி | 600 | 450 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 200 | 200 | 130 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 50 | 50 | 100 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 140 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

**கீரிமலை நகுலேஸ்வரா ஆலய உற்சவகால தினங்களுக்கானதும், சிவராத்திரி தினத்திற்கானதுமான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலை நகுலேஸ்வரா ஆலய உற்சவகால, சிவராத்திரி தினத்திற்கான தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை பகிரங்க ஏலம் மூலம் குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுடையவர்கள் 29.01.2026 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை கேணியடி வாகனத்தரிப்பிடத்தில் ரூபா 200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பகிரங்க ஏலம்**

உற்சவகாலத்திற்குரிய கடைகள் 1ஆம் கட்டமாக எதிர்வரும் 30.01.2026 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கும், 2 ஆம் கட்டமாக தற்காலிக கடைகள் எதிர்வரும் 10.02.2026 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் மேலதிகமாக சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் கேள்வியில் சித்திபெற்றிருப்பினும் வியாபார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை.**
**021 224 4180** (C-4895) 28.01.2026

# பாதிரியார் மீது தாக்குதல் நடத்திய பொலிஸாருக்கு பணியிடை நீக்கம்

(கொழும்பு)

கம்பஹா பகுதியில் கத்தோலிக்க அருட்தந்தை ஒருவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆறு பேரும் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கம்பஹா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்களை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, நீர்கொழும்பு மாநகர சபைக்கு முன்னால் அமைதி போராட்டம் ஒன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-8)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் பணிபுரியும்
திரு.K.பவன் அவர்களின்
அன்பு மாமனார்

### நாகநாதபிள்ளை சபாநாதன்

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி குடும்பம்

# மகத்தான சேவையாளனுக்கு மணிவிழா வாழ்த்துக்கள்




உயர்திரு.

## ஆறுமுகம் சத்தியமூர்த்தி

(நிர்வாக உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (அதிசிறப்பு)
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம், B.A, HNDA மற்றும்
தாபன நிதி சார்ந்த தமிழ் உத்தியோகத்தர்களுக்குரிய மிகச் சிறந்த வளவாளர், )

கடமை புரிகின்றவிடம் கோவில் என்றே
கனதியுறு சேவைதனில் இறையைக் கண்டே
திடமுறவே அலுவலர்க்கும் சேவை நாடும்
திறத்தார்க்கும் உரியவழி முறைகள் காட்டி
கடினமுறு வேளைகளில் அவற்றைத் தீர்க்கும்
காத்திரம் சேர் உபாயமதில் வெற்றி பெற்றோன்
திடமுடனே ஒழுக்காற்று விடயம் தீர்த்து
திறனுடனே பலர்மீள வழிகள் செய்தோன்

தாபனம் சார் நடைமுறைகள் நிதி முறைமை
தக்கபடி ஆராய்ந்து கற்றுத்தேறி
ஆவணமாய் அலுவலர்க்கு நூலாய் தந்து
அதன் வழி நாடறிந்த வளவாளராகி
தாபனத்துக் குள்ளேயும் வெளியும் ஆகி
தனித்துவமாய் நகைச்சுவை பாங்கும் மேவ
ஆவன செய்து அகவையறுபதினைக் காணும்
ஆசானே சத்தியமூர்த்தி நீடு வாழி!

(6671)

வாழ்த்துவோர்: அன்புக்கினிய உறவினர்களும் உத்தியோகத்தர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# தென்கொரிய பொருட்களுக்கான வரி மேலும் அதிகரிப்பு

## —ட்ரம்ப் அதிரடி—



(வோஷிங்டன்)

தென்கொரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரியை 25 சதவீதமாக உயர்த்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு எட்டப்பட்ட வர்த்தக உடன்படிக்கையைத் தென்கொரியா முறையாகப் பின்பற்றவில்லை என தெரிவித்தே டொனால்ட் ட்ரம்ப் இந்த வரி அதிகரிப்பை அறிவித்துள்ளார்.

இதன்படி, வாகனங்கள், மரம், மருந்துகள் மற்றும் ஏனைய அனைத்து "பரஸ்பர வர்த்தகப் பொருட்களுக்கும்" விதிக்கப்பட்டிருந்த 15 சதவீத வரியானது, இனி 25 சதவீதமாக அதிகரிக்கப்படும் என டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உடன்படிக்கையின்படி, அமெரிக்கா தனது வரிகளை விரைவாகக் குறைத்துள்ள போதிலும், தென்கொரியப் பாராளுமன்றம் அந்த உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்குவதில் மந்தகதியில் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் குறித்து தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனத் தென்கொரியா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து வோஷிங்டனுடன் அவசர பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க விரும்புவதாகவும் தென்கொரியா கூறியுள்ளது.

இந்தநிலையில், கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென்கொரிய தொழில் அமைச்சர் கிம் ஜ°ங் - க்வான், விரைவில் வோஷிங்டன் சென்று அமெரிக்க வர்த்தகச் செயலாளர் ஹவார்ட் லட்னிக்கை சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (3)

# எந்தவொரு ...

# தக்க பதிலடி...



டெஹ்ரானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முக்கிய சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்நாட்டு வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் எஸ்மாயில் பகாயி, பிராந்தியத்தில் அமெரிக்காவின் சமீபத்திய நடவடிக்கைகள் மற்றும் இராணுவப் பயிற்சிகள் குறித்து மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

"நாங்கள் ஒரு வகையான கலப்பினப் போரை எதிர்கொண்டுள்ளோம், தொடர்ந்து எதிர்கொள்கிறோம்.

ஜ°ன் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, கடந்த சில மாதங்களாக, அமெரிக்கா மற்றும் சியோனிச ஆட்சியிடமிருந்து புதிய அச்சுறுத்தல்களை நாங்கள் எதிர்கொண்டுள்ளோம்.

ஈரானிய ரியால் மதிப்பிழப்பு நடவடிக்கையை நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வர்த்தகர்கள், அழைப்பு விடுத்த ஈரானிய சந்தைகள் மற்றும் சந்தைகளில் அமைதியான

# பிரித்தானிய பிரதமர் சீனாவுக்கு விஜயம்



(பீஜிங்)

கடந்த எட்டு ஆண்டுகளில் பிரித்தானிய பிரதமர் ஒருவர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக, பிரதமர் கீர் ஸ்டார்மர் இன்று பீஜிங் செல்கிறார்.

தனது இந்தப் பயணம் குறித்து புளூம்பெர்க் ஊடகத்திற்கு கருத்து தெரிவித்துள்ள அவர், அமெரிக்கா அல்லது சீனா ஆகிய இரு நாடுகளில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் தமக்கு இல்லை எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான சீனாவைப் புறக்கணிப்பது புத்திசாலித்தனமான செயல் அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லண்டனில் சர்ச்சைக்குரிய சீன "மெகா" தூதரகத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட சில நாட்களிலேயே இந்த விஜயம் அமைகிறது. (3)

# சமூக ஊடகங்கள் பயன்படுத்த சிறுவர்களுக்கு தடை

## எகிப்து அரசாங்கம் அதிரடி



(கெய்ரோ)

டிஜிற்றல் ஊடகங்களின் ஆதிக்கத்திலிருந்து சிறுவர், சிறுமிகளைப் பாதுகாக்கும் நோக்கில், சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த புதிய சட்டத்தைக் கொண்டுவர எகிப்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டு வெளியான புள்ளி விபரங்களின்படி, எகிப்தில் உள்ள 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டது.

இவர்கள் மிக எளிதாக இணையவழி மோசடிகள் மற்றும் தேவையற்ற இணைய அபாயங்களில் சிக்குவது தரவுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, எகிப்திய அரசு மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகம், அந்நாட்டு பாராளுமன்றம், சிறுவர் நல அமைப்புடன் இணைந்து இது குறித்து ஆய்வு மேற்கொண்டு விரைவில் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்டோருக்கும், பிரித்தானியாவில் 15 வயதுக்குட்பட்டோருக்கும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகளின் சட்டதிட்டங்களை முன்மாதிரியாகக் கொண்டே எகிப்திலும் இச்சட்டம் வடிவமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ஆக்கிரமிப்பிற்கும் ...யை வழங்குவோம்!

### ஈ.ரான் சபதம்

**(டெஹ்ரான்)......... எந்தவொரு ஆக்கிரமிப்புச் செயலுக்கும் கடந்த காலத்தைவிட மிகவும் சக்திவாய்ந்த முறையில் வருத்தத்தை தூண்டும் பதிலை நாடு வழங்கும் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

போராட்டங்கள் தொடரப்பட்டது.

இஸ்ரேலிய ஆட்சியாலும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பாலும் வெளிப்படையாக ஊக்குவிக்கப்பட்ட இந்த வன்முறை, பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

கடைகள், அரசு நிறுவனங்கள், பொது சேவை வசதிகள் பரவலாக அழிக்கப்பட்டன. பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய உளவு நிறுவனங்கள் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தன என்பதை ஈரானிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவை கலகக்காரர்களுக்கும் தெருக்களில் செயல்படும் ஆயுதமேந்திய தரப்புக்கும் நிதி, பயிற்சி மற்றும் ஊடக ஆதரவை வழங்குகின்றன.

பிராந்தியத்தில் உள்ள எந்தவொரு பாதுகாப்பின்மையும் ஈரானை மட்டுமே நோக்கியதல்ல என்பதை பிராந்திய நாடுகள் அறிந்திருப்பதாகவும், அதனால் தான் பிராந்திய நாடுகளிடையே ஒரு பொதுவான கவலை இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி ஈரான் தனது சொந்த திறன்களில் நம்பிக்கை கொண்டுள்ளது. மேலும் ஜூன் மாத அனுபவங்களையும் மனதில் கொண்டுள்ளது.

எந்தவொரு ஆக்கிரமிப்பிற்கும் கடந்த காலத்தை விட மிகவும் சக்தி வாய்ந்த முறையில் வருத்தத்தைத் தூண்டும் பதிலுடன் அது பதிலளிக்கும்" என கூறியுள்ளார். (3)

## காசாவிலிருந்து இறுதிப் பணயக் கைதியின் உடலையும் மீட்டது இஸ்ரேல்!




(காசா)

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினரால் கடத்தப்பட்ட 251 பேரில் எஞ்சியிருந்த இறுதி பணயக் கைதியான ரான் கிவிலி (Ran Gvili) என்பவரது உடலை இஸ்ரேலியப் படைகள் வடக்கு காசாவில் உள்ள ஒரு மயானத்திலிருந்து மீட்டுள்ளன.

24 வயதான ரான் கிவிலி விசேட அதிரடிப் படைவீரர் (Yamam) ஆவார். ஒக்டோபர் மாத தாக்குதலின் போது போரிட்டு உயிரிழந்த இவரது உடலை ஹமாஸ் அமைப்பினர் காசாவிற்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆரம்பிக்கப்பட்ட விசேட இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் இவரது உடல் மீட்கப்பட்டது. "நாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்றிவிட்டோம் இறுதிப் பணயக் கைதி வரை அனைவரையும் மீட்டுவிட்டோம்," என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

ரான் கிவிலியின் உடல் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள அமைதித்திட்டத்தில் மிக முக்கியமான இரண்டாம் கட்டம் அமுலுக்கு வரவுள்ளது.

காசாவில் பாதுகாப்பை உறுதிப்படுத்த சர்வதேச பாதுகாப்புப் படை நிலை நிறுத்தப்படும்.

இந்தப் படைக்கு அமெரிக்க ஜெனரல் ஜஸ்பர் ஜெஃபர்ஸ் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், இஸ்ரேலிய இராணுவம் படிப்படியாக காசாவிலிருந்து வெளியேறும்.

இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, காசாவிற்கும் எகிப்திற்கும் இடையிலான பிரதான எல்லையான ரஃபா எல்லைக் கடவை மீண்டும் திறக்கப்படவுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இது மனிதாபிமான உதவிகள் மற்றும் மக்களின் நடமாட்டத்திற்குப் பேருதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)



## அமெரிக்காவில் பனிப்புயல்; இதுவரை 30பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தென் மாகாணங்கள் முதல் வடகிழக்கு மாகாணங்கள் வரை நீண்டுள்ள பாரிய பனிப்புயல் காரணமாக இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நியூயோர்க் நகரில் மட்டும் குளிரில் உறைந்து 8 பேர் உயிரிழந்துள்ளனர். மாசசூசெட்ஸ் மற்றும் ஓஹியோவில் பனி அகற்றும் வாகனங்கள் மோதி இருவர் உயிரிழந்துள்ளனர். டெக்சாஸ் மற்றும் ஆர்கன்சாஸில் பனிச்சறுக்கு விளையாட்டின் போது ஏற்பட்ட விபத்துகளில் இரு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடும் பனிப்பொழிவு மற்றும் உறைபனி மழையால் மின் கம்பிகள் அறுந்து விழுந்ததில், மிசிசிப்பி மற்றும் டென்னசி உள்ளிட்ட மாநிலங்களில் சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளன.

பனிப்புயல் காரணமாக இதுவரை 12 ஆயிரத்திற் கும் மேற்பட்ட விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. வீதிகளில் பனி, மலைபோல் குவிந்துள்ளதால் பல மாநிலங்களில் போக்குவரத்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.


பல பகுதிகளில் வெப்பநிலை -31°C (மைனஸ் 31 டிகிரி செல்சியஸ்) வரை குறைந்துள்ளதால் மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கியுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் டெங்கு அபாயம்
## நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு) ..............................

**2026 ஜனவரியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**



2025 ஜனவரி மாதத்தின் குறித்த காலப்பகுதியில் சுமார் 4 ஆயிரத்து 970 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த தாகவும், இந்த வருடம் இதே காலப்பகுதியில் 6 ஆயிரத்து 521 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் செயல் பணிப்பாளர் கபில கன்னங்கர சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது எனவும்,

அதன்படி ஆயிரத்து 627 நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலும் கம்பஹா மாவட்டத்தில் 971 டெங்கு நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
உயரம்: 5'9"
கி-பா-05
தகைமை/தொழில்: BEng,Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15912

பிறப்பு:1987-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
6இல்சூரிசெவ்
கி-பா-8 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Diploma, Photographer (Norway)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15913

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:அனுசம்
5இல்சூரிசெவ்
கி-பா-12 1/2
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Diploma, Technical Manager (pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15916

பிறப்பு: 1986-இந்து
நட்சத்திரம்: பூரம்
7இல்செவ்
கி-பா-46
உயரம்:5'6"
தகைமை/தொழில்- BA, DO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்
தொ.இ: B/15917

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம் - உத்தரட்டாதி
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L, Building Contractor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15918

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Management, Accountant (London)
எதிர்பார்ப்பு: PR உள்ளவர்
தொ.இ: G/15911

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-ரேவதி
1இல்செவ்
கி-பா- 59
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc.Demo
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15914

பிறப்பு-1997-RC
நட்சத்திரம்- சித்திரை
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: G/15915

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்-புனர்பூசம்
கி-பா- 28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BCom, DO
எதிர்பார்ப்பு -அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15919

பிறப்பு-1988-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி.பா:23 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA, PGDE, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/11592

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 530

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## பேராசை

அள்ள அள்ளக் குறையாதது அட்சய பாத்திரம் அது நமக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கின்றோம்.

ஆனால் போடப் போட நிரம்பாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா?

நம்மில், பலபேரிடம் அந்த பாத்திரம் உண்டு. அதுதான் "பேராசை" என்கின்ற பாத்திரம், அதை நிறைவு செய்யவே முடியாது.

பேராசையைப் பற்றி சூஃபி இலக்கியத்திலே ஒரு பிரபலமான கதை உண்டாம். அதை ஒரு பெரியவர் (சுவாமி சுகபோதானந்தா) எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஒரு மன்னர் நகர்வலம் போய்க் கொண்டிருக்கிறார்.

ஒரு பிச்சைக்காரன் மன்னர் எதிரிலே வந்தான். "பிச்சை கொடுங்கள்!" என்றான்.

"என்னுடைய அமைதியைக் கெடுக்காதே. போ!" என்றார் மன்னர். அவன் சிரித்தான். "அரசே! உங்கள் அமைதி கெடுக்கக்கூடிய நிலையிலே இருந்தால் அதற்குப் பெயர் அமைதியே கிடையாது!" என்றான்.

எதிரிலே நிற்கிறது வெறும் பிச்சைக்காரன் இல்லை. யோகி! என்பதை மன்னர் புரிந்து கொண்டார்.

"துறவியே! உங்களுக்கு என்ன வேண்டும் என்றாலும் கேளுங்கள். கொடுக்கிறேன்!" என்றார்.

அந்தத் துறவி மறுபடியும் சிரிக்கிறார்.

"அரசே! உங்களால் முடியாததை எல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்!" என்றார்.

மன்னருக்கு கோபம் வந்துவிட்டது. என்ன இவர் இப்படி சொல்கிறார் என்று நினைத்தார்.

நகர்வலத்தை பாதியிலே நிறுத்தினார்.

"வாங்க அரண்மனைக்கு!" என்றார். துறவியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தார்.

துறவி தன்னிடம் இருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார். "இது நிறைய எனக்குப் பொற்காசுகள் வேண்டும்!" என்றார்.

"பூ! இவ்வளவுதானா?" என்று சொல்லிக்கொண்டே கையைத் தட்டினார் மன்னர்.

ஒரு பெரிய தாம்பளம் நிறைய பொற்காசுகள் வந்து சேர்ந்தது. அதை அள்ளிப் போட்டார். போடப் போட அந்தப் பிச்சைப் பாத்திரம், பொற்காசுகள் அத்தனையையும் உள்ளே வாங்கிக்கொண்டே இருக்கிறது.

அரசாங்க கஜானாவே காலியாகி விட்டது. மூட்டை விழுங்கிக் கொண்டே இருக்கு கடைசி வரை அந்த பிச்சைப் பாத்திரம் நிரம்பவே இல்லை. அரசரிடம் இருந்த கர்வம் போய் விட்டது.

அப்படியே "பொத்" என்று துறவி காலிலே விழுந்தார். அப்போது அந்தத் துறவி சொன்னாராம்:

"மன்னா! இந்தப் பிச்சைப் பாத்திரத்தை உங்களாலே மட்டுமில்லை.வேறு யாராலும் நிரப்ப முடியாது அதற்கு என்ன காரணம் என்றால் இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல.

பேராசைகளுடன் வாழ்ந்து செத்துப்போன ஒரு மனிதனின் மண்டை ஓடு இது" என்றாராம்.

பாருங்கள்... இதுதான் அந்த சூஃபி இலக்கியக் கதை.

செத்த பிறகும் நிறைவு இீல்லை என்றால் அது எப்பேற்பட்ட பேராசையாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

நம் ஆள் ஒருவர் கல்யாணம் செய்ய பெண் பார்த்துக் கொண்டிருந்தார்.

அழகு - அறிவு - படிப்பு எதுவும் தேவை இல்லை. பணம் மட்டும் இருந்தால் போதும் என்று பார்க்கிறவர்களிடம் எல்லாம் சொல்லி வைத்தார்.

ரொம்ப நாளைக்குப் பிறகு ஒரு பணக்காரர் கிடைத்தார். அவர் சொன்னார்.

"இதோ பாருங்கள்... எனக்கு 20 வயதிலே ஒரு மகள். அவளை நீங்கள் கல்யாணம் செய்துகொண்டால் 2 இலட்சம் பணம் கொடுப்பேன்.

25 வயதிலே ஒரு பெண் இருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் 2 1/2 இலட்சம் தருவேன்.

30 வயதிலே ஒரு பெண் இருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் 3 இலட்சம் தருவேன்! என்ன சொல்கிறாய்?".

இவன் கொஞ்ச நேரம் யோசித்தான். அதன்பின் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

"ஏன் சார் உங்களிடம் 50 வயதிலே ஏதாவது பெண் இருக்கிறதா?" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி
# கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதி (மேல்த்தளம்), ஸ்கந்தபுரம் சந்தை மற்றும் ஆனைவிழுந்தான்குளம் சந்தையில் அமைந்துள்ள கடைகளினை நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரல்-2026

**கேள்விப் பத்திரம்வழங்கும்திகதி :- 2026.01.28 தொடக்கம் 2026.02.10 ஆம்திகதி வரை மு.ப 9.00 தொடக்கம் பி.ப 1.00 மணிவரை (அலுவலக நேரம்)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி :-2026.02.11 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம்திறக்கப்படும்திகதி :- 2026.02.11 ஆம்திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு**

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கரைச்சி பிரதேசசபை, தலைமை அலுவலகம்,**

**கரைச்சி பிரதேச சபை வளாக கடைத்தொகுதியிலுள்ள கடைகளுக்கான கேள்வி அட்டவணை (மேல்த்தளம்)**

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடைஇல 01 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,160,000.00 |
| 02 | கடைஇல 02 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,160,000.00 |
| 03 | கடைஇல 03 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,160,000.00 |
| 04 | கடைஇல 04 | 12,000.00 | 1,000.00 | 40,000.00 | 2,160,000.00 |

**ஸ்கந்தபுரம் கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | கடை இல 33 | 4,000.00 | 1,000.00 | 5,000.00 | 480,000.00 |
| 02 | கடை இல 34 | 4,000.00 | 1,000.00 | 5,000.00 | 480,000.00 |
| 03 | கடை இல 35 | 5,000.00 | 1,000.00 | 6,000.00 | 600,000.00 |

**ஆனைவிழுந்தான்குளம் சந்தை கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | விபரம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படக் கூடிய கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 02 | கடை இல 02 | 3,350.00 | 1,000.00 | 3,000.00 | 201,000.00 |

**நிபந்தனைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருப்பதுடன் கரைச்சி பிரதேசசபையின் ஆளுகை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

02. கரைச்சி பிரதேச சபையினால் ஏற்கனவே கேள்வி கோரப்பட்ட கேள்விகள் மூலம் நீண்டகால குத்தகைதாரராக தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுச்சந்தைகளில் நிரந்தர கடைகளினை வாடகைக்கு பெற்றவர்கள் எவரும் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் அவ்வாறு தவறுதலாக விண்ணப்பித்திருப்பின் அவருடைய கேள்விப்பத்திரமானது சபையினால் எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

03. கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான அரை நிரந்தர, தற்காலிக கடைகளினை வாடகைக்கு நடத்துபவர்கள் இக்கேள்வி கோரலுக்கு விண்ணப்பிக்க முடியுமாயினும் அவர்கள் கேள்வி கோரலில் சித்திகர குத்தகைதாரராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் ஏற்கனவே வாடகைக்கு வழங்கப்பட்ட கடைகளினை சபைக்கு மீள கையளிப்புச்செய்தல் கட்டாயமானதாகும்.

04. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் வதிவிடம் மற்றும் ஆள் அடையாளம் ஆகியவற்றை உறுதிப்படுத்தி கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் குடும்ப பங்கீட்டு அட்டை பிரதி என்பவற்றுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.

05. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர்/செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் **2026.02.11 ஆம் திகதி முற்பகல் 10.00** மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு **2026.02.11 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

06. எமது சபையினால் கறுப்பு பட்டியலில் இணைக்கப்பட்ட எவரும் கேள்விப்பத்திரங்கள் விண்ணப்பிக்க முடியாது. எனினும் அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

07. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

08. ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் மட்டுமே தனது பெயரில் கேள்வி விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும். ( குடும்பம் என கருதப்படுவது இங்கு கணவன், மனைவி மற்றும் திருமணமாகாத பிள்ளைகளை குறிக்கும்) மற்றும் குறித்த அந்நபர் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியுமாயினும் ஒரு கடைக்கு மாத்திரமே வாடகை ஒப்பந்தத்தினை மேற்கொள்ள முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் கடைத்தெரிவானது கேள்விச்சபையினாலேயே தீர்மானிக்கப்படும்.

09. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படும்.

10. சித்திகரக் குத்தகைதாரர் அறிவித்தல் கிடைத்து ஏழு நாட்களுக்குள் கேள்வி சமர்ப்பித்த முழுத்தொகை (ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் - KEY MONEY) ஐயும் மூன்று மாதகால முற்பண வாடகையினையும் செலுத்தி ஒப்பந்தம் ஒன்றை செய்தல் வேண்டும். இதில் ஒரே தடவையில் கோரிப் பெறும் பணம் (KEY MONEY) எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டாது.

11. முற்குறிப்பிட்ட 09, 10 ஆவது நிபந்தனைகளின் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து கேள்விகள் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன், அவர்களது பெயர் கறுப்பு பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

12. குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மாதாந்த கடை வாடகையாக விலைமதிப்பீட்டுத் திணைக் களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துவதற்கு உடன்படுவதுடன் மாத வாடகைப் பணத்தினை குறித்த மாதத்தின் இறுதி வேலைநாளுக்குள் செலுத்துவதற்கும் உடன்பட வேண்டும். தவறின் மாத வாடகையின் 10% தண்டப்பணத்தினையும் மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ச்சியாக இரு மாதங்களுக்கு வாடகை செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

13. கடையை வாடகைக்கு எடுப்பவரினாலேயே நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது கணவன் / மனைவி/ வாரிசு நடாத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம்:- மகன்,மகள்).

14. சபையின் அனுமதியின்றி வியாபார நிலையத்தினுள் எவ்வித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.

15. தெரிவுசெய்யப்படாத கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

16. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும் என்பதுடன் களஞ்சிய நோக்கத்திற்காக கடைகள் வழங்கப்படமாட்டாது.

17. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள், அபாயகரமான தொழில்கள் மற்றும் சகிக்கமுடியாததும் அபாயகரமானதுமான தொழில்கள் ஆகிய வியாபார நட்வடிக்கைகளில் ஈடுபடமுடியாது.

18. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரியினை / உரிமக்கட்டணத்தினை வருடாந்தம் மாரச் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வரிச் சான்றிதழினை / உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

19. சித்திகர குத்தகைதாரராக தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இலங்கை மின்சார சபை கிளிநொச்சியில் மின் இணைப்பு படிவத்தை பூரணப்படுத்தி நேரடியாக அவரே தனது பெயரில் மின் இணைப்பை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இதர வசதிகளுக்கான கட்டணங்கள் ( நீர் / மின்சாரக்கட்டணம் மற்றும் இணைப்புக்கட்டணங்கள் உட்பட) அனைத்தும் குத்தகைதாரரரின் பொறுப்பிலும் செலவிலும் அமையும்.

20. சித்திகர குத்தகைதாரர் கரைச்சி பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.

21. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.

22. சபையின் தவிசாளரின் இந்த நிபந்தனைகள் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக தவிசாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.

23. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.** (C-4896)

திகதி :- 28/01/2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் மாவட்டம் வடமராட்சி பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

# புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ சமர்ப்பண கும்பாபிஷேக விஞ்ஞாபனம் - 2026

**திருச்சிற்றம்பலம்**

நாடு மிகவுடையாள் நெல்லண்டை எம் பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய் மமதை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதி நலத்தாள் மலர்ந்தாள் சரண்.

**திருச்சிற்றம்பலம்**

| கர்மாரம்பம் | எண்ணெய்க்காப்பு | கும்பாபிஷேகம் |
|---|---|---|
| 28.01.2026 புதன் | 29.01.2026 வியாழக்கிழமை | 30.01.2026 வெள்ளிக்கிழமை |
| காலை 07.53 மணி முதல் | காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை | காலை 07.32 - 08.06 மணி வரை |

அம்பாளின் பக்த அடியார்களே!

இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் முத்தாக திகழும் இலங்காபுரியின் வடபுலத்தே சைவத்தமிழ் பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்கள் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணத்தின் வடமராட்சி தும்பளை நெல்லண்டை பதியில் இத்தி மரத்தடியில் அமர்ந்து இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன எல்லாம் கொடுத்தருளும் அன்னை வீரபத்திரமாகாளியம்மனுக்கு நிகழும் சுபமங்களகரமான விசுவாவசு வருஷம் தை மாதம் 16ம் நாள் (30.01.2026) வெள்ளிக்கிழமை துவாதசி திதியும், திருவாதிரை நட்சத்திரமும், சித்தியோகமும் கூடிய காலை 07.32 - 08.06 மணிவரையுள்ள கும்ப லக்ன சுபவேளையில் எம்பெருமாட்டி வீரபத்திரமாகாளி அம்மனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் திருக்குடமுழுக்கு மஹா சாந்தி நிகழ அம்பாளின் திருவுள்ளம் கொண்டருளி உள்ளதால் இப்புனித நன்னாளில் அடியார்கள் புனித சீலர்களாக வருகை தந்து பெரும் சாந்தியை தரிசித்து திருவருள் பெற்று சீரும் சிறப்பாக சகல ஸ்ஸ்வரியமும் இகபர சுகவாழ்வு வாழ எல்லோரையும் வருக வருக என்று அன்புடன் அழைக்கின்றோம்.

## கும்பாபிஷேக கிரியா பூர்வ நிகழ்வுகள்

**தை திங்கள் 14ம் நாள் 28.01.2026 புதன்கிழமை**

காலை 07.53 மணிமுதல் கர்மாரம்பம், விநாயக பூஜை, புண்ணியாகவாசனம், ஆச்சாரியவர்ணம், அனுக்ஞை, தனலஷ்மி, குபேர பூசை, திரவியசுத்தி, திரவிய விபாகம், பிரதிஷ்டா சங்கற்பம், கணபதி ஹோமம், பேரிடதாடனம், நவக்கிரக ஹோமம், கிராம சாந்தி, பிரவேசபலி, ரக்ஷோக்கண ஹோமம், திசா ஹோமம், வாஸ்து சாந்தி, மிருத் சங்கரணம் கங்கா தீர்த்தம், ஆதித்யாக்னி சங்கரணம், விபூதி பிரசாதம் வழங்கல்.
மாலை 03.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, அங்குரார்பணம், ரட்ஷாபந் தனம், நித்திய துவஜாரோகனம், கடஸ் தாபனம், கலா கர்ஷணம், சணஹோமம், யாக பூசை, நாவாக்னி விபர்ஜனம், பிரதான கும்பங்கள் யாக சாலைப் பிரவேசம், விஷேட பூசை, பூர்ணாகுதி, உபசார பூசை, வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம், ஆசாரி வஸ்திர சம்பாவனை,
முன் இரவு 07. 19 மணிமுதல் 08.06 மணிவரையுள்ள சிம்மலக்ன சுபவேளையில் தீபஸ்தாபனம், கோவாசம், தூபிஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் நடைபெறும்.

**தை திங்கள் 15ம் நாள் 29.01.2026 வியாழக்கிழமை**

எண்ணைக்காப்பு 29.01.2026 காலை 08.00 மணிமுதல் மாலை 03.00 மணிவரை

காலை 08.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விஷேட சந்தி, நித்திய துவஜா ரோகணம் பூசை, யாகசாலைபிரவேசம், யாக பூசை, நாவக்னி பூசை, காயத்திரி ஹோமம், விஷேட திரவிய ஹோமம், சகஸ்ர நாம ஹோமம், பூர்ணாகுதி வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், விபூதி பிரசாதம் வழங்கல்

மாலை 04.00 மணிமுதல் கணபதி பூசை விஷேட பஞ்சசௌவ்ய பூசை, பஞ்சாமிர்த பூசை, சோடஷ விம்ப சுத்தி பூசை, நித்திய துவஜா பூசை, யாகப்பிரவேசம், யாக பூசை, நவாக்னி பூசை, ஹோமம், திரிசதி நாம ஹோமம், மூர்த்தி விம்பசுத்தி அபிஷேகம், மூர்த்தி ரட்ஷாபந்தனம், பூர்வாங்க துவார பூசை, சாங்க சடத்துவ நியாசம், பரிவார பரிசாகுதி, நவகுண்ட பரிசாகுதி, பூரணாகுதி, விஷேட தீபாராதனை, வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், சிவாச்சாரியவஸ்திர சம்பாவாசனை விபூதி பிரசாதம், வழங்கல்.

**தை திங்கள் 16ம் நாள் 30.01.2026 வெள்ளிக்கிழமை**

அதிகாலை 04.30 மணிமுதல் சித்தி விநாயகர் பூசை, புண்ணியாக வாசனம், நித்திய துவஜா பூசை, உபசார தீபாராதனை, சதுர் வேத ஹோமம், ஸ்தோத்திர கீர்த்தனை திருமுறை ராக தாள, சங்க, செளண்டி, நர்த்தன சமர்ப்பனம். அனந்த கோடி நமஸ்காரம், அந்தர்பலி, பகிர்பலி, தானாதிகள், சர்வமங்கள வாத்திய ஹோச சகிதம் பிரதான கும்பம் புறப்பாடு, காலை 07.32 தொடக்கம் 08.06 வரையுள்ள சுபவேளையில் தூபி அபிஷேகம், மகா கும்பாபிஷேகம், திருக்கதவம் காப்பிடல், யாக உத்வாசனம், தசமங்கள தரிசனம், ஆச்சாரிய சம்பாவனை. ஆசியுரை, மகா அபிஷேகம், விசேட பூசை அன்னதானம், நடைபெறும்

### கும்பாபிஷேக குருமார்கள் விபரம்

விண்ணில் இருந்து அருள்ஆசி வழங்கும் நெல்லண்டை பத்திரகாளி அம்மன், வீரமாகாளி அம்மன், பரம்பரை பூசகர், ஆதீனகர்த்தா
தேவஸ்தானாதிபதி அமரர் தியாக.சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள், அமரர் வே.இராமலிங்கக்குருக்கள் ஆசியுடன்

**சர்வபோதகாச்சாரியர்**
"ஆகம பிரவீனா, கிரியாகிரம ஜோதி"
சிவஸ்ரீ.பா.பாலமனோன் குருக்கள்
"ஆகம கலா மையம் தாபகர்"
(ஏழாலை பாதாள வைரவர் கோவில் பிரதமகுரு)

**கும்பாபிஷேக பிரதமகுரு**
"சிவாகம கிரியாமணி தேவிபூஜா துரந்தர்"
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தனஞ்சயக்குருக்கள்
(பரம்பரை குருக்கள், ஆதீன கர்த்தா பிரதமகுரு)
(நெல்லண்டை பத்திரகாளி அம்மன்,ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

**சாதகாசிரியர்கள்**
"சங்கீத சாதகர்"
சிவஸ்ரீ. இ.கணேஸ்வரக் குருக்கள்
(குரும்பைசிட்டி முத்துமாரி அம்மன் கோவில் பிரதமகுரு)
"சாதக சாகரம்"
சிவஸ்ரீ.பா.நரேந்திராக் குருக்கள்
(கொம்மந்தறை மனோன்மணி அம்மன் பிரதம குரு)
சிவஸ்ரீ.பா.நகுலேஸ்வராக் குருக்கள்
(கம்பர்மலை தான்தோன்றி விநாயகர் கோவில் பிரதமகுரு)

**நவகுண்டகுருமணிகள்**
சிவஸ்ரீ.வே.யோகராசாக் குருக்கள் (ஓமந்தை)
சிவஸ்ரீ.வை.சிவராசாக்குருக்கள் (தும்பளை)
சிவஸ்ரீ.சி.குகராசாக்குருக்கள் (கெருடாவில்)
சிவஸ்ரீ.வை. இராமேஸ்வரக்குருக்கள் (மந்திகை)
சிவஸ்ரீ.பா.மனோகரக்குருக்கள் (அச்சுவேலி)
சிவஸ்ரீ.இ.கிரிசாந்தக் குருக்கள் (திருநெல்வேலி)
சிவஸ்ரீ.ந.சிவதர்ஷக்குருக்கள் (நல்லூர்)
சிவஸ்ரீ.சிவதாசக்குருக்கள் (கல்வியங்காடு)
சிவஸ்ரீ.முருகதாசக் குருக்கள் (கட்டுவன்)
சிவஸ்ரீ.வி.வித்தியாபரக் குருக்கள் (மந்திகை)
சிவஸ்ரீ.ச.கஜமுகக்குருக்கள் (கரணவாய்)

**"அம்பாள் நித்திய பூஜாதுரந்தரர்"**
சிவஸ்ரீ. இராம சுந்தரலிங்கக்குருக்கள்
பிரதமகுரு ஆதீனகர்த்தா நெல்லண்டை பத்திரகாளி அம்மன்

**ஆலய நித்திய உதவி அர்ச்சகர்கள்**
சிவத்திரு.சுந்தர்.விபூசன் ஐயா
சிவத்திரு சுந்தர்.திரிஷ்யந்த் ஐயா

**உதவி அர்ச்சகர்கள்**
சிவத்திரு.இ.கணேசலிங்கம் ஐயா (நாயன்மார்க்கட்டு)
சிவத்திரு.பிரசன்னா ஐயா (வேலணை)
சிவத்திரு.நி.நிமல்ராஜ் ஐயா (வல்வை)
சிவத்திரு.எ.எழில் ஐயா (முல்லை)
சிவத்திரு.ஞா.துவாரகன் ஐயா (சங்கரத்தை)
சிவத்திரு.க.பவித்திரன் ஐயா (மட்டக்களப்பு)

**வேதம்**
"ஆகமவேத வித்பன்னர்"
சிவஸ்ரீ.அ.ஐயப்பதாசக்குருக்கள்
(கட்டுவன் ஐயப்பன் கோவில் பிரதம குரு)

**அருள் ஆசி வழங்கும் குருமணிகள்**
சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
(அனைத்துலக இந்துமத குருபீடாதிபதி)
(வல்வை முத்துமாரியம்மன் கோவில் பிரதமகுரு)
சிவஸ்ரீ.வே.தியானந்தராசாக் குருக்கள்
(தும்பளை முருகன் கோவில் பிரதமகுரு)
சிவஸ்ரீ.கிருபானந்த குருக்கள்
(சோதிடபூசணம்,
மண்டுவில் சோலை அம்மன் பிரதம குருக்கள்)

**கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவர்கள்**
சிவஸ்ரீ.சண்முகரத்தினக்குருக்கள்
(திருகோணமலை சிவன் கோவில்)
சிவஸ்ரீ.திருஞானசம்பந்தக்குருக்கள்
(குமுழமுனை கற்பக விநாயகர் கோவில் பிரதமகுரு)
சிவஸ்ரீ.ச.பிரசன்னாக்குருக்கள்
(திருகோணமலை சிவன் கோவில் பிரதமகுரு)

| வர்ண வேலை | கட்டடவேலை | கூரை வேலை | சிற்பாசாரியார் | தெறோசோ பதித்தல் | ஒலி,ஒளி அமைப்பு | சுவாமி அலங்காரம் | மங்கள வாத்தியம் |
|---|---|---|---|---|---|---|---|
| தரன் ஆட்ஸ் | செல்வகுமார் தும்பளை | கி.விஜயராசா பொலிகண்டி | க.ததீஸ்கரன் அராலி | கி.மோகனசுந்தரம் | இ.பரமதாஸ் தும்பளை | வை.ரங்கேஸ்வரன் | சிவசுப்பிரமணியம் குழுவினர். |

குறிப்பு: கும்பாபிஷேகதினத்திலும் அதற்கு முன்னதாக நடைபெறும் கிரிகைகளிலும் கலந்து கொண்டு தங்களாலான சிவத்திரவியங்களை கொடுத்தும் அம்பாளின் இஷ்ட சித்திகளையும் பெற்று வாழ்வில் சீரும் சிறப்புடன் வாழ்வீர்களாக

தொடர்ந்து மண்டலாபிஷேகம் 45 நாட்கள் நடைபெறும்
"அம்பிகை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"

இங்ஙனம்
தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
பிரதமகுருக்கள்

(6673)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வாய்ப்புகளை அதிகமாக பயன்படுத்திக் கொள்ளும் போது நம் திறமை வளர்ந்து பெரு கேருகிறது. – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## என் இனமே: என் சனமே எம் விதியை என் செய்வோம்!

தா... தா... தா... தா...தா... தா... தா... குறைக்கு என் செய்வோம் என்கிறார் வீ.கல்யாணசுந்தரனார்.

ஏழு தடவைகள் "தா" என முன்மொழிகின்ற வீ.க. ஏழு தா வைச் சேர்த்து **எழுதாக்குறை** எனப் பொருள்படுத்தி எழுதாக் குறைக்கு என் செய்வேன் எனப் பாடுகின்றார்.

ஆம், எம் இனத்தை நினைக்கும்கால், கல்யாணசுந்தரனார் பாடிய அந்தப் பாடல் வரிகளே ஞாபகத்துக்கு வரும்.

உண்மை. எங்கள் தமிழ் இனத்துக்கு எழுதாக்குறை உண்டு என்பதை நாம் ஏற்றுத் தானாக வேண்டும்.

ஏனெனில் சேர் பொன்.இராமநாதன் பிரபு நினைத்திருந்தால், இலங்கையில் தமிழர் தாயகத்தை உருவாக்கியிருக்க முடியும்.

அந்தளவுக்கு அவர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.

ஏனோ தெரியவில்லை தமிழர்களை சிங்கள மக்கள் எப்போதும் அனுசரித்துச் செல்வார்கள் என இராமநாதன்பிரபு நம்பினார்.

அதேநேரம் இந்த நாட்டின் முதலாவது பிரத மராக இருந்த டி.எஸ்.சேனநாயக்க உள்ளொன்றும் புறமொன்றும் வைத்து சேர் பொன். இராமநாதனை ஏமாற்றுகிறார்.

தானும் தன் இனமும் ஏமாற்றப்படுவதை இராமநாதன் பிரபு இறுதிவரை அறிந்திருப்பாரோ என்பது கூடத் தெரியவில்லை.

அதுதான் இல்லை என்றால், பண்டா – செல்வா ஒப்பந்தமாவது நடைமுறைக்கு வந்திருந்தால் எங்கள் இனத்தின் நிலைமை மாறி இருக்கும்.

இதற்கும் அப்பால், விடுதலைப் புலிகளின் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் கொண்டு வந்த தீர்வுத் திட்டம், ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் என எல்லாமும் தீயிலே எரிந்து போக, இலங்கை – இந்திய ஒப்பந்தம் எம் தமிழினம் சார்ந்து மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் அதுவே தமிழ் மக்கள் மீது இந்தியா வெறுப்புக் கொள்வதற்கு வழி கோலிற்று என்ற உண்மை கொடுமையிலும் கொடுமை.

என்ன செய்வது தமிழ் மக்களின் ஒரே பலமாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாதுபோக, புலிகள் இல்லை என்ற துணிச்சலில் தமிழ் மக்களை சிங்களப் பேரினவாதிகள் வஞ்சித்ததைவிட, எங்கள் தமிழ்ச் சந்தர்ப்பவாதிகள் எங்களை வஞ்சித்ததே மிக உச்சம் எனலாம்.

ஆம், ஆளுக்கொரு கருத்து. ஆளுக்கொரு அமைப்பு. ஆளுக்கொரு அரசியல். புலம்பெயர் நாடுகளில் இருந்து கொண்டு தாயகத்தை குழப்புகின்ற குழுக்கள். யார் – எவர் என்ற ஆராய்வுகள் எதுவும் இல்லாமல் வழங்கப்பட்ட ஆதரவுகள் என எல்லாமும் சேர்ந்து எங்கள் தமிழ் அரசியலை கிறுக்கல் சித்திரமாக ஆக்கிற்று.

இனி என்ன செய்யலாம் என்ற கையறு நிலையில், ஏதோ ஓரிரண்டு தமிழ்க் கட்சிகளேனும் எங்கள் எதிர்காலம் குறித்தும் எங்களின் உரிமை குறித்தும் கருசனை கொள்ளும் – கதைக்கும் – பேசும் என்று நம்பியிருந்தால், அவர்கள் ஒருவரை ஒருவர் அறுத்து விழுத்து வதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர் எனும்போதுதான்; எங்கள் தமிழ் இனத்துக்கு **எழுதாக்குறை** உண்டென்பதை உணர முடிகிறது.

ஆம், எழுதாக்குறைக்கு என் செய்வோம்.

### வரலாற்றில் முதல் முறையாக

# ரூ. 1,750 நாளாந்த சம்பளம் பெறும் தோட்டத் தொழிலாளர்கள்

## ஜனாதிபதி அநுர சுட்டிக்காட்டு

(கம்பளை)

வரலாற்றில் முதல் முறையாக வருகின்ற பெப்ரவரி மாதம் தோட்டத் தொழிலாளர்கள் நாளாந்த சம்பளமாக 1,750 ரூபா பெறுகின்றார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

டித்வா சூறாவளியால் சேதமடைந்த மதத் தலங்களை புனரமைப்பதற்கான "கட்டியெழுப்புவோம் ஒன்றிணைந்த உறுதியுடன்" தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று (27) முற்பகல் கம்பளை, தொரகல, பீகொக் ஹில் குடியிருப்பின் ஸ்ரீ போதிருக்காராம விஹாரையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அனர்த்தத்தைத் தொடர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத, கலாசார மற்றும் தொல்பொருள் தலங்கள் சேதமடைந்தன.

அந்த இடங்களில் தேவையான புனரமைப்புப் பணிகளை உடனடியாகத் தொடங்கி அவற்றை முன்னர் இருந்த நிலைக்கு மீளக்கட்டியெழுப்புவதற்கான அனைத்து புனரமைப்புப் பணிகளையும் குறித்த இடங்களின் தொல்லியல் பெறுமதியைப் பாதுகாக்கும் வகையில் மகா சங்கத்தினர் உட்பட ஏனைய மதத் தலைவர்களின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

மத்திய மலைநாட்டைப் பாதுகாத்து, முன்னேற்ற புதிய சட்டம் மற்றும் அதிகார சபை நிறுவப்படும் என்றும் கிராமப்புற வறுமையை ஒழிக்கவும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் அரசாங்கம் தற்போது அதிக பணிகளைச் செய்து வருவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, முதலாம் தரத்திற்கான புதிய கல்வி மறுசீரமைப்புகள் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மேலும், வரலாற்றில் முதல்முறையாக இந்த பெப்ரவரி மாதத்தில் தோட்டத் தொழிலாளர்கள் 1,750 ரூபா நாளாந்த சம்பளம் பெறுவார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-7)

# அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு ரூ. 220 பில்லியன் மேலதிக செலவு

## அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ

வைத்தியர்கள் உட்பட ஒட்டுமொத்த அரச சேவைக்கும் 2026 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அடிப்படைச் சம்பள அதிகரிப்பிற்காக அரசாங்கத்திற்கு 220 பில்லியன் ரூபா மேலதிக நிதியைச் செலவிட நேரிட்டுள்ளதாக சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று (27) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

நாங்கள், வைத்தியர்கள் உட்பட நாட்டின் ஒட்டுமொத்த அரச ஊழியர்களுக்கும் இந்த மாதத்திலும் அடிப்படைச் சம்பள அதிகரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

இந்த அடிப்படைச் சம்பள அதிகரிப்பிற்காக மாத்திரம் இவ்வருடத்தில் 220 பில்லியன் ரூபா செலவாகின்றது.

2025 ஆம் ஆண்டில் 110 பில்லியன்ரூபா செலவானது. இவ்வருடம் 220 பில்லியன் ரூபா செலவாகின்றது. 2027 இல் 330 பில்லியன்ரூபா செலவாகும். இது மொத்த சம்பளத்திற்குச் செலவாகும் தொகை அல்ல. இந்தச் சம்பள அதிகரிப்பிற்கு மாத்திரமேயாகும். அப்போது இது சம்பளத்துடன் இணைகின்றது.

அந்த அதிகரிக்கப்பட்ட அடிப்படைச் சம்பளம் ஜனவரி மாதத்திலும் அதிகமாகக் கிடைத்தது. அந்த அடிப்படைச் சம்பளத்திற்கு அமைவாக மேலதிக நேரம் (OT) அதிகரிக்கின்றது. ஏனைய மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அதிகரிக்கின்றன. விடுமுறை தினக் கொடுப்பனவுகள் அதிகரிக்கின்றன. இவற்றை நாட்டின் பொருளாதார நிலைமைக்குச் சார்பாகவே செய்ய முடியும் என்று தெரிவித்தார். (ம-7)

### கச்சதீவு அந்தோனியார் ஆலய

# வருடாந்த திருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல்

வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்தத் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில், நேற்று மு.ப.11.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள வருடாந்த விழாவை சிறப்பாக நடத்துவதற்காக, அதற்கான நிதி விடயங்கள் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் நோக்கில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் போது, விழாவுக்கான செலவீன திட்டமிடல், தேவையான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நிர்வாக ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிதி விடயங்கள் தொடர்பிலான ஒழுங்கமைப்புக்கள் தொடர்பில் அரசாங்க அதிபர், தவிசாளர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி உரிய வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் கே.சிவகரன், உதவி மாவட்டச் செயலாளர் உ.தர்சினி, நெடுந்தீவு பிரதேச செயலாளர் என்.பிரபாகரன், கடற்படை அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், விடய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 08

என்.சொக்கன்

தொடர்ச்சியாக ஈரான், க்வாடமாலா என்று இரண்டு இடங்களில் வெற்றி பெற்றதும், சிஐஏயிற்குத் தெம்பு கூடியது. இன்னும் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் (அதாவது, அமெரிக்க விரோதிகள்) எங்கெல்லாம் இருக்கிறார்கள் என்று தேட ஆரம்பித்தார்கள்.

அப்போது அவர்களுடைய கவனத்துக்கு வந்தது, க்யூபா, ஃபிடல் காஸ்ட்ரோ (Fidel Castro) தலைமையிலான புரட்சி அரசாங்கம் அங்கே அமைந்திருந்தது.

புரட்சியாவது புடலங்காயாவது. மற்ற கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களைப் போலவே, இந்த ஆளையும் கீழே தள்ளியாக வேண்டும் என்று முடிவுசெய்தது சிஐஏ.

அவர்கள் அப்படித் தீர்மானித்த நேரம், கொழுத்த ராகுகாலமாக இருந்திருக்கவேண்டும். அப்போது அவர்கள் காலைச் சுற்றிக் கொண்ட க்யூபாப் பாம்பு, இன்று வரை சிஐஏவின் சரித்திரத்தில் ஒரு கரும்புள்ளியாகவே தொடர்கிறது.


**5. அசட்டு உளவாளிகள்**

உலகப் புகழ் பெற்ற "மேட்" நகைச்சுவை இதழில், "Spy Vs Spy' என்ற பெயரில் ஒரு பிரபலமான கார்ட்டூன் வரிசை வெளியானது.

இதில் இரண்டு உளவாளிகள் இடம்பெறுவார்கள். ஒருவர் கறுப்பு Spy, இன்னொருவர் வெள்ளை Spy. இரண்டு வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களாகச் சித்திரிக்கப்படும் இந்த உளவாளிகள், ஒருவர் மற்றவருடைய இரகசியத்தைத் திருடவும், மற்றவர்களைத் தாக்கி அழிப்பதற்கும் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருப்பார்கள்.

பொதுவாக, உளவாளிகள் என்றாலே, அவர்கள் அதிபுத்திசாலிகளாகக் கருதப்படுவது வழக்கம். ஆனால், அடுத்தவரை ஏமாற்ற வேண்டும் என்கிற வேகத்தில், அவர்கள் சில சமயம் அடி முட்டாள்தனமாக நடந்துகொண்டு விடக்கூடும் என்கிற சாத்தியங்களை மிகப் பிரமாதமாக வெளிப்படுத்திய கார்ட்டூன் தொடர் இது. ஒரு வார்த்தைகூட வசனம் இல்லாமல், வெறும் காட்சிகளின் மூலமே சிரிக்கவைத்த இந்த 'Spy Vs Spy', பல நாடுகளைச் சேர்ந்த இரசிகர்களால் வெகுவாக வரவேற்கப்பட்டது.

ஆனால், நிஜத்தில் உளவாளிகள் இப்படியெல்லாமா அசட்டுத்தனமாக நடந்துகொள்வார்கள்? 'Spy Vs Spy' கதாபாத்திரங்களை உருவாக்கிய ஓவியர் அந்தோனியா ப்ரொஹியாஸ் (Antonio Prohias) இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொன்னதில்லை. ஆனால், அவர் பிறந்த க்யூபாவில், அவருடைய நகைச்சுவைக் கற்பனைகளையெல்லாம் தூக்கிச் சாப்பிடும்படியான உளவுக் கலாட்டாக்கள் நடந்திருக்கின்றன.



அத்தனைக்கும் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்: சிஐஏ! க்யூபாவில் போய் காமெடிப் படம் எடுக்கவேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம் இல்லை. ஆனால், அந்நாட்டின் ஆட்சியாளர் ஃபிடல் காஸ்ட்ரோவுக்கு எதிராக அவர்கள் எடுத்த எல்லா நடவடிக்கைகளும் புறப் பட்ட வேகத்தில் கீழே சுருண்டு விழுந்து மண்ணைக் கவ்வின.

காஸ்ட்ரோவுக்கு க்யூப மக்களிடையே இருந்த ஆதரவு அப்படிப்பட்டது. அவருடைய இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினர். சிஐஏவின் எல்லா முயற்சிகளையும் முன்கூட்டியே கண்டறிந்து முறியடித்தார்கள்.

சிஐஏவும் ஃபிடல் காஸ்ட்ரோவைக் கொன்றுவிடவேண்டும் என்பதற்காக என்னென்னவோ முயன்றுபார்த்தது. ஒன்று, இரண்டு இல்லை. 638 முறை ஃபிடல்காஸ்ட்ரோவைக் கொல்ல முயன்றிருக்கிறது சிஐஏ. உலக சரித்திரத்தில் வேறு எந்தத் தலைவரைக் கொல்வதற்கும் அத்தனை முயற்சிகளை யாரும் செய்திருக்கமாட்டார்கள்.

இதெல்லாம் சும்மா வதந்திகள் என்று நினைத்துவிடவேண்டாம். எண்பது வயது ஃபிடல் காஸ்ட்ரோ சமீபத்தில் எழுதிய ஒரு கட்டுரையில் தனக்கு எதிராக சிஐஏ/அமெரிக்கா பல கொலை முயற்சிகளை நிகழ்த்தித் தோல்வியடைந்ததை உறுதிசெய்திருக்கிறார். அதுமட்டுமில்லை கடந்த பல ஆண்டுகளாகவே சிஐஏயின் இரகசிய ஆவணங்கள் படிப்படியாக பொது மக்கள் பார்வைக்கு வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றின் அடிப்படையில், காஸ்ட்ரோவைக் கொல்வதற்காக சிஐஏ முயன்றுபார்த்த வழிமுறைகளெல்லாம் "CIA Targets Fidel" என்ற பெயரில் தனிப் புத்தகமாகவே வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏதோ ஜேம்ஸ் பாண்ட் நாவல் படிக்கிற ஆசையில் இந்தப் புத்தகத்தைப் புரட்டினால், வரிசையாக கல்கி, தேவன், கிரேஸி மோகன் ரேஞ்சுக்கு நகைச்சுவைக் காட்சிகள் தான் விரிகின்றன. பெரும்பாலான சதித் திட்டங்களைப்பற்றி படிக்கும் போது இப்படியெல்லாம் கூட அபத்தமாக யோசிக்கமுடியுமா என்று மலைப்பு தோன்றுகிறது.

**சில உதாரணங்கள்:**

- க்யூபாவின் புகழ் பெற்ற ஹவானா சுருட்டு, காஸ்ட்ரோவுக்கு மிகவும் பிடித்தமானது. அந்தச் சுருட்டுக்குள், வெடிமருந்தை ஒளித்து வைத்து விட வேண்டியது. காஸ்ட்ரோ அதைப் பற்றவைக்கும்போது, டமார்!

- கடலுக்கு அடியில் நெடுநேரம் நீச்சலடிப்பது காஸ்ட்ரோவின் பொழுதுபோக்கு. அவருடைய நீச்சல் உடைக்குள் விஷம் வைத்து விடுவது. அதைப் போட்டுக்கொண்டு நீச்சலடிக்கும் காஸ்ட்ரோவின் உடலில் விஷம் பரவும், அவர் செயலிழந்து மூழ்கிப்போய்விடுவார்.

- பேனா வடிவ விஷ ஊசி ஒன்றை, ஒரு சிஐஏ ஏஜெண்டிடம் கொடுத்து அனுப்புவது. அவர் அதை காஸ்ட்ரோவின் உடலில் குத்திவிட்டால், மிச்சத்தை விஷம் பார்த்துக்கொள்ளும்.

- காஸ்ட்ரோவின் காதலி ஒருவரைத் தங்கள் வசம் இழுத்துக் கொண்டு, அவரிடம் விஷ மாத்திரைகளைக் கொடுத்து அனுப்பியது சிஐஏ. காஸ்ட்ரோ காதல் மயக்கத்தில் இருக்கிறபோது எப்படியாவது அவர் அதை காஸ்ட்ரோவின் சாப்பாட்டில் கலந்துவிட்டால் போதும். சத்தமில்லாமல் வேலை முடிந்துவிடும்.

- பக்றீரியா கலந்த விஷத்தை காஸ்ட்ரோவின் கைக்குட்டையில் தெளித்துவிடுவது. அவர் எப்போதாவது மூக்கு உறிஞ்சுவதற்கு அல்லது வியர்வையை ஒற்று வதற்கு கர்ச்சீப் பயன்படுத்தாமலா இருந்துவிடுவார்?

இப்படி சிஐஏவின் ஃபிடல் காஸ்ட்ரோ கொலை முயற்சிப் பட்டியல் மைல்கணக்கில் நீண்டாலும், அத்தனை முயற்சிகளும் படுதோல்வி அடைந்தன. சிஐஏயால் அனுப்பப்பட்டவர்கள் யாராலும் காஸ்ட்ரோவை நெருங்கக்கூட முடியவில்லை. அந்த அளவுக்கு, அவரைச் சுற்றிலும் பக்காவான பாதுகாப்பு.

கடைசியில் வேறு வழியே இல்லாமல் மாஃபியா கும்பலின் உதவியை நாடியிருக்கிறார்கள். "எப்படியாவது காஸ்ட்ரோவைத் தீர்த்துடு" என்று மாடர்ன் தியேட்டர்ஸ் வில்லன்கள்போல்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத...

நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அராலிப் பகுதியில் ஒருவர் சட்ட விரோதமாக சாராய விற்பனையில் ஈடுபடுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 21 கால் போத்தல் சாராயம் மீட்கப்பட்டுள்ளது.

ஒரு கால் போத்தல் சாரயத்தை ஆயிரம் ரூபாய் வீதம் விற்பனை செய்து வந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,104)

## செட்டிகுளத்தில்...

ரக வாகனமும் மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்து ஜீப் ரக வாகனமும் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த விபத்தானது வீதியில் நின்ற கட்டாக்காலி மாடுகளினால் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது. (ம-7,250)

## வவுனியாவில்...

தில் பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் ஒன்று நேற்று இட்ம்பெற்றுள்ளது.

வவுனியா தாண்டிக்குளம் புகையிரதக் கடவையினை புகையிரத சமிக்ஞையை மீறி பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது யாழில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த புகையிரதத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தில் கிடாச்சூரி, சாஸ்திரி கூழாங்குளத்தை சேர்ந்த அல்பிரட் ஜெயராஜ் திலகவதி (வயது - 52) என்பவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7,250)

## கட்டுப்படுத்த...

ரொஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரவீந்திரநாத் தாபரே தமது வாதங்களை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் திறந்தவெளியில் கழிவுகள் எரிக்கப்படுவதால் பாரிய அளவில் காற்று மாசடைவு ஏற்படுகிறது. காற்று வழியாகத் தென்னிந்தியாவிலிருந்து வரும் கழிவுத்துகள்களாலும் இந்தப் பகுதியில் காற்று மாசடைவு அதிகரித்துள்ளது எனவும் சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இந்த மாசடைவு காரணமாகப் பொதுமக்கள் மத்தியில் நோய்த்தாக்கங்கள் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், இது தொடர்பான ஆதார அறிக்கைகளையும் சமர்ப்பித்தார். சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் ஆயம், யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியன இணைந்து, காற்று மாசடைவைக் குறைக்க எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

மேலும், யாழ்ப்பாண மாநகர சபை ஏன் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. இவ்வாறான பொதுப் பிரச்சினைகளை அரச நிறுவனங்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடுவதன் மூலம் தீர்க்க முடியும் எனவும் இவற்றை நீதிமன்றத்திற்கு வழக்காகக் கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை எனவும் நீதியரசர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தப் பிரச்சினையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு, பொலிஸார் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவினர் திறந்தவெளியில் கழிவுகளை எரிப்பவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (ம-7)

## மகா சிவராத்திரி...

மாநாட்டு மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் மகா சிவராத்திரி பெருவிழா ஒழுங்குமுறையுடனும் பாதுகாப்பாகவும் பக்தர்களுக்கு எந்த வித அசௌகரியமும் ஏற்படாத வகையிலும் நடத்தப்படுவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், பிரதேச சபை ஆகியவற்றின் பங்களிப்புடன் வீதி ஒழுங்குபடுத்தல் இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கங்களின் ஊடாக போக்குவரத்து மேலாண்மை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு பணிகள் மின்சார விநியோகம், நீர் விநியோகம், உணவு வழங்கல், பாதுகாப்பு விடயங்கள், சாரணியர் சேவை, செஞ்சிலுவை சேவை, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படை, மருத்துவ அவசர ஊர்தி சேவைகள் ஆகியவை தொடர்பாக தேவையான ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், வாகன அனுமதி பத்திரங்கள் வழங்கல் பிரதேச செயலகம் மன்னார் இணைப்பு அலுவலகம் அமைத்தல், தற்காலிக கொட்டகைகள் அமைத்தல், வர்த்தக நிலையங்கள் ஒழுங்குபடுத்தல், வாகனத் தரிப்பிடங்கள் ஏற்பாடு, ஊடக நடவடிக்கைகள், த°யணைப்பு சேவை, களப் பயண திகதி நிர்ணயம், விலை கட்டுப்பாடு உள்ளிட்ட மேலதிக விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டன. (ம-7)

## கனேடிய...

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டீன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்ற கலந்துரையாடலில் தற்போதைய அரசாங்கத்தின் அணுகுமுறைகள், அரசியல் நிலைப்பாடுகள், எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ம-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 6087
W 9 2 7 0 7 6
அத சம்பத W 7 0 7 6
சீட்டிழுப்பு இலக்கம் 662

சுப தவசக்
திகதி 2026.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 283
துலாம் 27 33 44 2312

தன நிதானய
திகதி - 2026.01.27
சீட்டிழுப்பு இலக்கம் - 2117
T 41 63 75 81 T

மெகா பவர்
திகதி 27/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2435
Z 26 07 33 42 73

ஜய
திகதி 2026.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 0355
V 7 2 0 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4329
சீட்டிழுப்பு திகதி 27.01.2026
D 41 48 54 75
D

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 1396
தனுசு 09 37 43 53 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.01.2026 வெற்றி வாரம் 0795
F 0 8 0 2 2 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,924,739.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3061
சீட்டிழுப்பு திகதி 2026.01.27 தினம் செவ்வாய்க்கிழமை
34 62 73 77 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,271,491.20

சனிதா
திகதி 27.01.2026 வெற்றி வாரம் 5222
38 44 61 73 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,697,798.40

சசிரி
வெற்றி வாரம் 891
சீட்டிழுப்பு திகதி 27.01.2026
செவ்வாய்க்கிழமை
22 35 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,787,400.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4773
சீட்டிழுப்பு திகதி 27.01.2026 தினம் செவ்வாய்க்கிழமை
05 06 16 59 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,974,846.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 09 09 55 63 68
சீட்டிழுப்பு வாரம் 2237
27.01.2026 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.623,979,773.60

செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2887
சீட்டிழுப்பு திகதி : 2026.01.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,962,012.80
ADA KOTIPATHI
10 20 40 57 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4899)

076 825 7716 (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

01.பளை, இந்து, 1988, அனுசம், Inventory officer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30529)

02.கோண்டாவில் - மண்டைதீவு, இந்து, 1989, மூலம், MBBS Doctor மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

03.அல்வாய், இந்து, 1990, ரோகிணி, Charted accountant மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42381)

04.நயினாதீவு, இந்து, 1991, சதயம், Bachelor, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(28920)

05.நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

07.கரவெட்டி, இந்து, 1993, பூரட்டாதி, Civil Engineer, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

08.திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)

09.கொக்குவில், இந்து, 1992, அனுசம், Aca[UK], BBA[Australia], Bsc LLM[UK], UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (C-4900)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193

## இந்தியாவில்...

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் நிபா வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ள நிலையில், இதுவரை 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் வைத்தியசாலைப் பணியாளர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நிபா வைரஸ் தொற்றாளர்களுடன் நேரடி தொடர்பில் இருந்ததாகக் கண்டறியப்பட்ட சுமார் 100 பேர் தனிமைப் படுத்தப்பட்டு மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

பழம் தின்னும் வௌவால்கள் (Fruit Bats) மூலம் இந்த வைரஸ் மனிதர்களுக்குப் பரவக்கூடும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மனிதர்களிடையே பரவுவதற்கும் வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிபா வைரஸ் தொற்றின் ஆரம்ப கட்ட அறிகுறிகளாக காய்ச்சல், தலைவலி, மூச்சு விடுவதில் சிரமம் ஆகியவை காணப்படுகின்றன. நோய்த்தொற்று தீவிரமடைந்தால் மூளை அழற்சி (Encephalitis) ஏற்பட்டு உயிரிழப்பு நேரிடக்கூடும்.

நிபா வைரஸிற்கு இதுவரை தடுப்பூசியோ அல்லது குறிப்பிட்ட சிகிச்சையோ இல்லை. இதனால், இந்த வைரஸ் உலக சுகாதார அமைப்பின் (WHO) முன்னுரிமை நோய்த் தொற்று பட்டியலில் இடம்பெற்றுள்ளது. முன்னைய நிபா வைரஸ் பரவல்களின் போது, இறப்பு விகிதம் 40% முதல் 75% வரை இருந்ததாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் ஏற்பட்டுள்ள நிபா வைரஸ் தொற்றை தொடர்ந்து, இலங்கையில் சுகாதார அதிகாரிகள் நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர்.இது குறித்து சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

தற்போதைக்கு இலங்கைக்கு உடனடி அச்சுறுத்தல் எதுவும் இல்லை. இருப்பினும், பிராந்திய நிலைமைகளை கவனமாக கண்காணித்து வருகிறோம். சர்வதேச சுகாதார அமைப்புகளின் வழிகாட்டுதலின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் நிபா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தாய்லாந்து, மலேசியா, நேபாளம், தைவான் உள்ளிட்ட பல நாடுகளின் விமான நிலையங்களில் சுகாதார பரிசோதனைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

பிராந்திய நாடுகள் அனைத்தும் நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்த தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## குளவிக்கொட்டுத்...

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அன்ரன் ஜோர்ஜ் (வயது-53) என்பவரே உயிரிழந்தவராவார்.

மாங்குளம் பழைய கொலணி பகுதியில் நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையிலிருந்து தனது மகனை அழைத்துவரும் போதே குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

மேலும் குளவிக்கொட்டுக்கு இலக்கான 5 மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(ம-7)

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமையில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை, இருபாலரும் விண்ணப்பிக்கலாம், (மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் தேவை) (1985)

071 555 1990, 077 310 0860

## மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 27.01.2026 அன்று ஓய்வுபெறும் திருமதி **பகீரதி கருணானந்தன்** அவர்களைப் பாராட்டி ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**திருமதி பகீரதி கருணானந்தன்**
(பகுதித் தலைவர் 6 - 8)
பயிற்றப்பட்ட ஆசிரியர் - வர்த்தகத்துறை

சேவை விபரம்
17.08.1988 – 01.02.1993
யா/புத்தகலட்டி ஶ்ரீவிஸ்னு வித்தி.
02.02.1993 – 01.01.1995
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
02.01.1995 – 31.12.1996
யா/ஆவரங்கால் மகாஜனா வித்தி.
01.01.1997 – 04.01.1998
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
05.01.1998 – 14.10.2002
யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
15.10.2002 – 01.01.2003
திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரி
02.01.2003 – 31.05.2004
திரு/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி
01.06.2004 – 04.09.2005
திரு/ஶ்ரீகோணலிங்க வித்தியாலயம்
05.09.2005 – 24.02.2015
யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
25.02.2015 – இன்றுவரை
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

Congratulations

வாழ்த்துவோர்:– **நலன்புரிக் கழகம், யா/அச்சுவேலி மத்திய கல்லூரி**

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42ம் லேனில் இரண்டு அறைகள் (AC / NON AC) இணைந்த குளியலறைகளுடன் கூடிய தொடர்மாடி வீடு, தனி அறை நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு. (6679)

075 278 6033

## மணமகள் தேவை

60 வயது, கனடா பிரஜாவுரிமை உள்ள விவாகரத்து பெற்ற பிள்ளைகள் அற்ற படித்த உத்தியோகத்திலுள்ள டாக்டர் மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை. சீதனம் தேவையில்லை. (6679)

077 539 9328

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் உள்ள உணவகம் ஒன்றிற்கு சகல உணவுகளும் தயாரிக்கக்கூடிய வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (6659)

தொடர்புகளுக்கு :
077 864 2772

## Keyboard Classes

தைப்பூச திருநாளில் (01.02.2026) புதிய பிரிவுகள் ஆரம்பம் தனியாக/ குழுவாகவும் கற்பிக்கப்படும். மேலைத்தேய/ கீழத்தேய இசைப் பயிற்சியைப் பெற தொடர்பு கொள்ளவும். (6678)

077 799 2769

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் இலந்தைக்குளம் வீதியில் புளியம் வீதி முகப்புடன் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- யாழ்ப்பாண பஸ் நிலையம் 3 ½ Km தூரம்.
- A9 வீதியிலிருந்து 350m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

தொடர்புகளுக்கு :
076 860 2770
076 987 8617 (1991)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org